**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**S.C. No: 161/2024**

**Dated: 13.05.2026**

**Deposition of Witnesses for PW - 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.ரமேஷ்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1முதல் 3 எதிரிகள் ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.09.2022-ம் தேதி 13.00 மணிக்கு நகர் ரோந்து பணியாக SI தமிழ்செல்வன் SSI சோலை ஆகியோருடன் ரோந்து பணியில் இருந்தபோது கிடைக்க பெற்ற ரகசிய தகவலின்படி புதுக்கோட்டை To தஞ்சாவூர் உதயம் மளிகை கடையில் அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருள் விற்பனை செய்வதாக கிடைத்த தகவலை பெற்று கடையை கண்காணித்தபோது வெள்ளை நிற உரப்பையில் ஏதோ எடுத்து விற்பனை செய்வதாக கண்டறிந்து அவர்களை பார்த்தும் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை பார்த்ததும் ஓடி எத்தணித்தவர்களை வளைத்து பிடித்து அந்த பையை சோதனை செய்தபோது சுமார் 25 பாக்கெட்டு எடை 7 கிலோ

500 கிராம் கால்ஸ் மற்றும் பான் மசாலா பாக்கெட்டு இருந்ததை கண்டு அதை விற்பனை செய்த பீர் முகமது, ஜாகீர் உசேன், சூரியராஜ் ஆகியோர்களை பிடித்து விசாரணை செய்யும் போது அவர்களது கடையிலிருந்து கைப்பற்றப்பட்ட வெள்ளை நிற சாக்குபையை சோதனை செய்தபோது கான்ஸ் மற்றும் பான் மசாலா ஆகிய போதை பொருள் இருந்ததால் 13.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் அதில் நானும் SSI சோலையும் கையொப்பம் செய்தோம். அதற்கான **கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 14.30 மணிக்கு மகஜரை கைப்பற்றிய இரண்டு இருசக்கர வாகனத்தை கைப்பற்றினோம். பின்பு எதிரிகள் வைத்திருந்து இரண்டு பட்டன் செல் மற்றும் ஒரு ஆண்ட்ராய்டு செல்போனை கைப்பற்றினோம். பின்பு நிலையம் கொண்டு வந்து எதிரி மீது உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய துணையாக இருந்தேன். சாட்சி 2 சோலை சிறப்பு உதவி ஆய்வாளர் 11.02.2023 அன்று இயற்கையாக இறந்து விட்டார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1-ம் எதிரியின் கடை மளிகை கடை என்றால் சரிதான். மேற்படி கடைக்கு இருபுறமும் கடைகள் உள்ளன. கடைக்கு சுமார் 100 மீட்டர் தூரத்தில் பேருந்து நிறுத்தம் உள்ளது. அதனால் அந்த இடம் ஆட்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் தனிநபர்களை சாட்சியாக இருக்க நாங்கள் அழைத்தும் அவர்கள் வர மறுத்ததாக சொல்லவில்லை. காவல் நிலையத்திற்கு 14.30 மணிக்கு சென்றேன். காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 15.00 மணிக்கு குற்ற எண் பதிவு செய்யப்பட்டது. இந்த

வழக்கின் குற்ற எண்.377/2022 என்று காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பிறகு தான் எங்களுக்கு தெரியும். கைப்பற்றுதல் மகஜரில் 377/2022 என குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு தான் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பின்பு தான் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு தான் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள விவரங்கள் யார் எழுதியது என்றால் கணிணி பராமரிக்கும் காவலரால் எழுதப்பட்டது. ரோந்து பணிக்கு செல்ல வேண்டுமென்றால் யார்யார் செல்கிறார்கள் எத்தனை மணிக்கு ரோந்து பணிக்கு செல்கிறார்கள் என்ற விவரம் பொது நாட்குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அன்றைய தேதியில் ரோந்து பணிக்கு சென்றதாக பொது நாட்குறிப்பில் குறிப்பிடப்படவில்லை என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமான ஆவணங்கள் அனைத்தும் கைப்பற்றுதல் மகஜரில் எந்த இடத்தில் வைத்து கையொப்பம் செய்தோமோ அந்த இடத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக 2.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு சென்ற பிறகு அதன் பிறகு வேறு எங்கும் சென்று எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். 2.30 மணிக்கு பிறகு நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்று வேறு எங்கும் சென்று எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரிதான். 1-ம் எதிரி கடைக்கு அருகில் 50 மீட்டர் தூரத்தில் தான் வேறு கடைகள் உள்ளது. தினந்தோறும் என்னுடைய போக்குவரத்து உள்ள இடம் தான் 1-ம் எதிரியின் கடை ஆகும் என்றால் சரிதான்.

மேற்படி இடத்தில் 1-ம் எதிரி நீண்ட நாட்களாக மளிகை வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி இடத்திலிருந்து காவல் நிலையம் 50 மீட்டர் தொலைவில் உள்ள இடம் ஆகும். நாங்கள் அனைவரும் சம்பவத்தன்று காவலர் சீருடையில் தான் இருந்தோம் என்றால் சரிதான். 1-ம் எதிரியின் கடை மெயின் ரோட்டில் சற்று வளைவாக இடத்தில் உள்ள கடை ஆகும். நாங்கள் 1-ம் எதிரியின் கடை நேர் எதிர் திசையில் உள்ளது. நாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்றோம். நாங்கள் மொத்தம் எத்தனை நபர்கள் கண்காணித்திருந்தோம் என்றால் 3 நபர்கள். கைப்பற்றுதல் மகஜரில் இந்த வழக்கு சம்பந்தமாக எதிரிகள் யாரிடமும் கையொப்பம் வாங்கவில்லை என்றால் நான் கையொப்பம் வாங்கவில்லை. கைப்பற்றுதல் மகஜரில் எதிரிகள் கையொப்பம் செய்த விவரம் எனக்கு தெரியாது. கணிணி ஆப்ரேட்டர் பெயர் என்னவென்றால் அது தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நாங்கள் 1-ம் எதிரியின் கடைக்கு எதிரில் நின்ற இடத்திற்கும் எதிரியின் கடைக்கும் இடையே 15 மீட்டர் இடைவெளி இருக்கும். நாங்கள் நின்ற இடத்திற்கும் 1-ம் எதிரியின் கடைக்கும் கட்டிடங்களோ மறைக்கக்கூடிய அமைப்புகளோ கிடையாது. அந்த இடத்தில் எவ்வளவு நேரம் நின்றோம் என்றால் 10 நிமிடங்கள் நின்றோம். 1-ம் எதிரியின் கடை முகப்பில் ஷெட்டர் போடப்பட்டு உள்ளே நின்று கொண்டு வியாபாரம் பார்க்கக்கூடிய அமைப்புடைய கடை என்றால் சரிதான். ஆகையால் கடையில் இருந்த விற்பனையாளர்கள் வடக்கு பக்கம் பார்க்க நின்று அல்லது உட்கார்ந்து வியாபாரம் பார்ப்பார்கள் என்றால் சரிதான். ஆகையால் நாங்கள் நின்ற இடம் 1-ம் எதிரியின் கடையிலிருந்து பார்த்தால் தெரியும் இடத்தில் இருந்தது என்றால் சரிதான். பொருட்கள் கைப்பற்றப்பட்டது பொறுத்து அவற்றை கைப்பற்றியதில் எதுவும் சீல்

வைக்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சொன்ன தேதியில் ரோந்து பணிக்கு செல்லவும் இல்லை என்றும் 1-ம் எதிரியின் கடையிலிருந்து எந்த ஒரு பொருளையும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் மற்ற மளிகை கடைகாரர்களுக்கும் வியாபார போட்டி சந்தையில் இருந்தது என்றும் அதனை அவர்கள் சாதகமாக பயன்படுத்தி மற்ற கடைகாரர்கள் எங்களை தூண்டி இந்த பொய் வழக்கை போட வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கில் கண்ட ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்
முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு
சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு
சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு
சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.